முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 395/2022

2024-ம் வருடம் ஏப்ரல் மாதம் 24-ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873-ம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: முகமது அலி (வா.சா.1) | தொழில்: விவசாயம் |
| த/பெ: லேட். காதர்மைதீன் | இனம்: ஆண் |
| கிராமம்: மடத்துக்குளம் | வயது: 65 |
| மாவட்டம்: திருப்பூர் | நாள்: 24-04-2024 |

முதல் விசாரணை:

சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

நான் வாதி ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. 08.10.2018 தேதி நானும், பிரதிவாதியும் செய்துகொண்ட பதிவு கிரைய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.1. 17.09.2022 தேதி நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கு அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.2. அதனை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.3. 17.10.2022 தேதி கீரனூர் சார் பதிவாளர் அவர்கள் எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய கடிதம் அஞ்சல் உறையுடன் கூடியது வா.சா.ஆ.4. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை: ஒத்திவைக்கப்படுகிறது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.04.24 14:13:56 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.